[1993 ஏப்ரல் 30

முற்பகல் 10-05

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பரிந்துரைக்கு மிக்க நன்றி. திருவண்ணாமலையில், திருவண்ணாமலை வட்டத்திற்கும், செங்கம் வட்டத்திற்கும் சேர்ந்தாற்போல் முதன்மை உரிமையியல் நீதிமன்றமும், கூடுதல் உரிமையியல் நீதிமன்றமும் ஆக இரண்டும் இருக்கின்றன. கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் பெரும்பாலும் செங்கம் வட்டத்திற்குண்டான கேஸ்கள் இருக்கின்றன. ஆகவே அதை மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா எனக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 543, திரு. என். ஆர். சிவபதி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு கேட்கிறார், மாண்புமிகு கல்வியமைச்சர்.

543—

மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

* 9324—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொருளாதார அடிப்படையில் சாதி வேறுபாடு இன்றி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது இத்திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏற்கனவே பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. புதிய திட்டம் ஏதும் தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை.

993 ஏப்ரல் 30]

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொருளாதார அடிப்படையில் ஜாதிகள் முன்னேறி இருந்தாலும், பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் எத்தனையோ பேர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். படிப்பதற்கும் கூட வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலையில் ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள். அப்படி பொருளாதாரத்தில் மட்டும் பின்னோக்கி இருக்கிற மிகவும் தாழ்ந்திருக்கிற அந்த மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு திறனாய்வுத் தேர்வு நடத்தி அதில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு படிப்புதவி வழங்கும் திட்டத்தைத் தற்போதைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வந்தது. இதன்படி ஊரகப் பகுதிகளில், சென்னை நகர் நீங்கலாக, பயிலும் மாணவ, மாணவியர்களில் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையை அவர்கள் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் காலம் வரையிலும் பெறலாம். பெற்றோரின் ஆண்டு வருமானம் 12,000-க்கும் குறைவாக இருக்க வேண்டும். இன்னொன்று, பள்ளியிறுதி வகுப்புகள் மற்றும் பட்ட வகுப்புகளில் உயர்ந்த மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கெல்லாம் சாதி வேறுபாடின்றி பொருளாதார அடிப்படையில் படிப்புதவித் தொகைத் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 2,662 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தின்படி உயர்ந்த மதிப்பெண் பெறும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்கு மேற்படாமல் இருக்கவேண்டும். இந்தத் திட்டத்தை முதலிலே மைய அரசின் திட்டமாக அறிமுகப்படுத்தினாலும் இப்போது இதை மாநில அரசின் திட்டமாக நாம் செயல்படுத்தி வருகிறோம். அதேபோல் கல்லூரி மாணவர்களுக்கும் சில திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே ஈ.வே.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்பு உதவித் திட்டம் என்ற பெயரில் மட்டும் அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் சேரும் ஏழை எளிய மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம்

[1993 ஏப்ரல் 30

12,000-க்கு மிகாமல் உள்ள மாணவியர் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதி பெறுகின்றனர். இத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயில்விப்புக் கட்டணமாகிய 300 ரூபாய் பட்டப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையில் வேறுபாடின்றி மாணவர்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்ற இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு விளக்கத்தினைத் தந்தார்கள். ஆனால் இன்றைக்கு எவ்வளவோ முன்னேறிய சமுதாயத்தில் படிக்கிற மாணவர்கள் கூட பொருளாதாரச் சூழ்நிலையில் பின்தங்கி இருக்கிற நிலையைப் பார்க்கிறபோது, அதிக வசதி கொண்ட மாணவர்கள் பெரும்பாலும் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கூட, வசதியானவர்கள் இந்த உதவித்தொகை பெறுகிற நேரத்தில் அதிகமாகக் கல்வி பயில்கிற உயர்ந்த ஜாதியினர் மற்றும் பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருக்கிற மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை அதிகமாகக் கிடைக்காத காரணத்தால் அவர்களுடைய கல்வித் தகுதி இடையிலே தடைப்படுகிற சூழ்நிலையைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமான உதவித்தொகை கொடுக்க முன்வருவார்களா ? அதோடு மட்டுமல்லாமல்......

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வியோடு நிறுத்துங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை அதிகப் படுத்துவதற்கான எந்தவிதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பாகப் படிக்கின்ற எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் குறிப்பாக முற்பட்ட மாணவர்களுக்கு வேறு உதவித் தொகைகள் இல்லாத காரணத்தினால் மெரிட் ஸ்காலர்ஷிப் போன்று வழங்குவதற்கும், மெரிட் ஸ்காலர்ஷிப்பினுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெரிட் ஸ்காலர்ஷிப் ஏற்கனவே 2, 3 திட்டங்களில் எப்படி நாம் கொடுத்து வருகிறோம் என்பதை நான் என்னுடைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சாதாரண சம்பளம் வாங்குவது என்று சொன்னாலும் கூட மினிமம் 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு எந்தவிதமான உபகாரச் சம்பளமும் மருத்துவக் கல்லூரியிலோ பொறியியல் கல்லூரியிலோ அவர்கள் பெற்றுப் படிப்பதற்கு ஒரு வாய்ப்பு இல்லை. ஆகவே இந்த வருமான வரம்பு ரூ. 12,500 அல்லது 25,000 என்று சொல்வதை 35,000 ரூபாய் அளவுக்கு உயர்த்தினால்தான் இப்படிப்பட்ட மக்கள் எல்லாம், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கூடப் பயன் பெறுவார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை உயர்த்துவதற்குப் பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளம் வாங்குவதே இதுபோன்ற செலவுகளுக்காகத்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி உதவித் தொகையானது தொழில் பயிலும், எம்.பி.பி.எஸ்.,

போன்ற படிப்புகள் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுப்பதில் முன் உரிமை கொடுத்து வழங்கப்படுகிறதா ? அது எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய, மிகவும் பின் தங்கிய, ஆதிதிராவிடர்களுக்கான படிப்பு உதவித் தொகைகளை அந்தந்தத் துறையினர் முறையாக வழங்கி வருகின்றனர். அது பற்றிய முழு விவரம் தெரிய வேண்டுமென்றால் தனிக் கேள்வியாகப் போட்டால் அந்த அமைச்சர் பதில் சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—வினா எண் 544 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு கல்வியமைச்சர்.

544—

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் மூன்றடுக்கு முறை.

* 10438—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் கல்வித் துறையில் மூன்றடுக்கு முறை (Three-tier System) செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வித்துறையில் நடைமுறையிலிருந்த மூன்றடுக்கு முறை ஆசிரியர் ஆலோசனைக் குழு மாற்றம் செய்யப்பட்டு நான்கடுக்கு முறை ஆலோசனைக் குழு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த '' த்ரீ டையர் சிஸ்டம் '' இன்று எஜுகேஷனில் வந்து இங்கிலாந்திலே மிகவும் பிரசித்தம் பெற்று அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே '' த்ரீ டையர் சிஸ்டம் '' என்ற முறையைக் கடைப்பிடிப்போமானால் மாணவ மாணவியர்கள் தகுந்த பாடங்களைப் படிப்பது மட்டுமல்லாமல் ' பார்ட் டைம் ஜாப் ' ஆக அந்தப்பள்ளிச்